அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 20/97

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்.
கொழும்பு-07
1997.09...8...

எல்லா அமைச்சுக்ககளின் செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்!

## இலங்கை தொழில்நுட்பச் சேவை பிரமாணக்குறிப்பில் உள்ளடங்கிய சில விடயங்களைத் தெளிவுபடுத்தல்.

1994 ஜூலை மாதம் 25ஆந் திகதி வெளியிடப்பட்ட 27/94 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி அன்றுவரை இருந்த மத்திய மட்டத்திலான தொழில்நுட்பச் சேவை உத்தியோகத்தர்கள் 1994 ஜூலை மாதம் 01ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் இலங்கை தொழில்நுட்பச் செவைக்கு உள்ளீர்க்கப்பட்டார்கள். இலங்கை தொழில்நுட்பச் சேவைக்கான பிரமாணக்குறிப்பு இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் 915/18 ஆம் இலக்க 1996-03-22ஆந் தேதிய அதிவிசேட வர்த்தமானக் குறிப்பின் ஏற்பாடுகளை செயற்படுத்தும்போது பின்வரும் வழிவகைகளை கையாளவேண்டுமென வலியுறுத்தப்படுகிறது.

02. **ஒவ்வொரு வகுப்புக்கான பதவி எண்ணிக்கை**

பிரமாணக்குறிப்பின் 5:0 ஆம் பிரிவின்படி வகுப்பு II தரம் 'ஆ'வில் இருந்து வகுப்பு I வரை பதவிஅணி விகிதமின்றி திணைக்களத்திற்கு ஏற்புடைய மொத்தப் பதவி எண்ணிக்கையை மீறாதவாறு அந்தந்த தரங்களின் பதவிஅணியை சம்பந்தப்பட்ட திணைக்களம்/அமைச்சு தீர்மானித்தல் வேண்டும். விசேட வகுப்பில் இருக்க வேண்டிய பதவியணியை பிரமாணக்குறிப்பின் 5:1 ஆம் பந்தியின் பிரகாரம் தொழில்நுட்பச் சேவைகள் சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு தீர்மானிக்கும் எல்லாத் தகவல்களுக்கும் திறைசேரியின் அனுமதியையும் பெறுதல் வேண்டும்.

03. **ஆட்சேர்ப்புகள்.**

தொழில்நுட்பச் சேவைக்கு ஆட்சேர்ப்புகள் செய்வது தொடர்பில் பின்வரும் தெளிவுபடுத்தல்கள் செய்யப்படுகிறது.

3:1 தொழில்நுட்பச் சேவை பிரமாணக் குறிப்பின் 7:0 ஆம் பந்தியில் உள்ள "அதன்படி சம்பந்தப்பட்ட அமைச்சு/திணைக்களத்தலைவர்களினால் ஆட்சேர்ப்புகள் செய்யப்பட வேண்டும்". என்பது மீதும் 6:2 ஆம்

பந்தியினல் ஆட்சேர்ப்புகள் அனைத்தும்தொழில்நுட்பச் சேவைகள் சபையின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படும்." என்பது மீதும் கவனம் செலுத்தப்படுகிறது. அதன்படி தொழில்நுட்பச் சேவைக்கான ஆட்சேர்ப்புக்கள் யாவும் திணைக்களத்தின் /அமைச்சின் தேவைக்கேற்ப சம்பந்தப்பட்ட நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**ஆட்சேர்ப்புத்திட்டம்.**

பிரமாணக்குறிப்பின் 7.0 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்காக தொழில்நுட்பச் சேவைபற்றிய பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளை உள்ளடக்கி அதற்காக தாபனப் பணிப்பாளரின் அனுமதியை பெறுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக தாபன விதிக்கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 2:9 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டுமென்பதுடன் தாபனக், கோவையின் முதலாம் தொகுப்பின் 2ஆம் பின்னிணைப்பில் குறிப்பிட்டுள்ள மாதிரியின்படி சம்பந்தப்பட்ட திட்டங்களை தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டங்கள்.**

பழைய நியமனங்களுக்கு ஏற்புடையதாக சம்பள மீளமைப்பின்போதும் 1997-01-01 ஆந் திகதிக்குப் பின்னராசச் செய்யப்படும். நியமனங்கள் தொடர்பாகவும் 2/97 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் மூலம் விதிக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டங்களை ஏற்புடையனவாக்கிக் கொள்ள வேண்டும்

**திணைக்களங்களுடனான பரீட்சைகளும் வினைதிறன் காண்தடைப்பரீட்சைகளும்**

பிரமாணக்குறிப்பின் 9.0 ஆம் பந்தி தாபனத் தலைவர்களின் கவனத்திற் கொண்டுவரப்படுவதுடன் திணைக்களங்களுடனான பரீட்சைகளும் வினைத்திறன்காண்தடைப்பரீட்சைகளுமாகிய இரண்டும் ஒன்றாவதில்லையென்றும் ஒவ்வொறாக நடாத்த வேண்டிய பரீட்சைகள் இரண்டென்பதும் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது. திணைக்களப் பரீட்சைகள் என்பது தரங்களிலான பதவிஉயர்வுகளுக்காக உத்தியோகத்தர்கள் தகைமைபெறும் பரீட்சைகளாவதுடன் வினைத்திறன் காண் தடைப்பரீட்சைகள் என்பது ஏதேனும் நிச்சயமான சம்பளபடிநிலைகளை அடைவதற்கு முன்னராக சித்தியடைய வேண்டியவைக ளாகும்.

பிரமாணக் குறிப்பின் 9:0 ஆம் பந்தியின் 1ஆம் உபபந்தி மீது கவனம் செலுத்தப்படுவதுடன் இப்பரீட்சைகளுக்கான பொதுப் பரீட்சையொன்று பரீட்சை திணைக்களத்தினால் நடாத்துவதுபற்றி தீர்மானிக்கும்வரை தற்போது அந்தந்த திணைக்களங்களினாலும் நிறுவனங்களினாலும் நடாத்தப்படுகின்ற பரீட்சைகள் அதே முறையில் தொடர்ந்து நடாத்தப்படவேண்டும். இதுவரையில்

இப்பரீட்சைகள் நடாத்தப்படாத நிறுவனங்களில் இப்பரீட்சைகளை நடாத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

## 07. இலங்கை தொழில் நுட்பச் சேவைகள் சபை

தொழில்நுட்பச் சேவைபற்றிய பிரமாணக் குறிப்பின் 3:0 (ஆ) பந்திமீது கவனம் செலுத்தப்படுகிறது. தொழில்நுட்பச்சேவையின் முகாமை தொடர்பாக கொள்கைரீதியில்தீர்மானங்கள் எடுக்கும் பொறுப்பு இலங்கை தொழில் நுட்பச் சேவைகள் சபையை சாருவதுடன் அச்சபைமூலம் எடுக்கப்படும் அத்தகைய தீர்மானங்கள் சுற்றறிக்கை மதியுரைகளாக இடைக்கிடை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்படும். ஊழியர்களை பயிற்றுவித்தலுடன் அவர்களை ஈடுபடுத்துவது பற்றிய கொள்கைத் தீர்மானங்களும் தொழில் நுட்பச் சேவைகள் சபையினால் எடுக்கப்படுவதுடன் திணைக்களங்களின் ஆளணிகளை பயிற்றுவித்தல், அவர்களை சேவையில் ஈடுபடுத்தல், மற்றும் இடமாற்றம் செய்தல் முதலிய பொறுப்புக்கள் அமைச்சுக்கள்/திணைக்களத் தலைவர்களையே சாருமென்பதும் இத்தால் வலியுறுத்தப்படுகின்றது.

திணைக்களங்களுக்கிடையிலான இடமாற்றக் கோரிக்கைகள் இருப்பின் அவற்றை மட்டும் இலங்கை தொழில்நுட்பச் சேவைகள் சபைக்கு முன்னளிக்கவேண்டும்.

## 08. பதவி உயர்வுகள்

8:1 1994-07-01 ஆந் திகதி வரை செயற்பாட்டிலிருந்து மத்திய மட்டத் தொழிநுட்பச் சேவைபிரமாணக் குறிப்பின்படி அப்போதைக்கு அச்சேவையிலிருந்த சில உத்தியோகத்தர்களுக்கு கிடைக்க வேண்டியிருந்த பதவிஉயர்வுகள் வழங்கப்படாதிருந்தால் அப்போதைக்கு வலுவிலிருந்த பிரமாணத்தின்படி எவரேனுமொரு உத்தியோகத்தருக்கு கிடைக்க வேண்டியிருந்த பதவிஉயர்வுகளை வேண்டிய ஆகக்குறைந்த தகைமைகள் பூர்த்திசெய்தபின்னர் செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்தந்தச் சேவையில் பூர்த்திசெய்ய வேண்டியிருந்த ஆகக்குறைந்த சேவைக்காலமும் உயர்தரத்திற்கு நியமனம் செய்வதற்காக வேண்டிய ஆகக் குறைந்த பரீட்சைகளுடனான தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதென திணைக்களத் தலைவர் திருப்தியடைதல் வேண்டும்.

8:2. அவ்வாறு அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய பதவிஉயர்வுகள் வழங்கப்பட்டபின் 1994-07-01 திகதியில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்குரிய வகுப்பை/தரத்தை கவனத்திற்கொண்டு 1994-07-01 ஆந் திகதி தொடக்கம் செயற்படும்வண்ணம் 27/94 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள மதியுரைகளுக்கு

அமைவாக அவ்உத்தியோகதர்களை அதைவிட உயர்தரத்திற்கு உள்ளீர்ப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன்படி 1994-07-01ஆந் திகதி தொடக்கம் இலங்கை தொழில்நுட்பச் சேவைகள் சம்பந்தப்பட்ட தரத்திற்கு அவரை நியமனம் செய்யும் கடிதம் வழங்கப்பட வேண்டும்.

8:3. 1994-07-01 ஆந் திகதி தொடக்கம் இலங்கை தொழில்நுட்பச் சேவைக்கு எவரேனுமொரு உத்தியோகத்தரை நியமனம் செய்து வழங்கப்படும் நியமனக் கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில் நுட்பச் சேவை பிரமாணத்தின் 8:0,9:0 ஆம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள தேவைகளை கவனத்திற்கொண்டு தொழில்நுட்பச் சேவை பிரமாணத்திற்கு அமைவாக 1994-07-01ஆந் திகதிக்குப் பின் அவருக்கு பதவிஉயர்வுகளை வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்பதவி உயர்வுகளை வழங்கும்போது பிரமாணத்தின் 4:0 ஆம் பந்திமீது விசேட கவனம் செலுத்தப்படுவதுடன் ஆட்சேர்ப்புத்தரமாகிய II (ஆ)வகுப்பிலிருந்து I ஆம் வகுப்பு வரையிலான பதவிஉயர்வுகள் பதவியணி விகிதமின்றி செயற்படுத்த வேண்டும்.

8:4. மேலே 8:1 ஆம் பிரிவின் கீழ் எவரேனும் ஒரு உத்தியோகதருக்கு பதவிஉயர்வொன்றை வழங்கும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு பதவிஉயர்வு வழங்கப்பட்ட திகதி தொடக்கம் 1994-07-01 ஆந் திகதி வரை மத்திய மட்டத்தின் தொழில் நுட்பச் சேவையில் இருந்த சேவைக்காலத்தையும் தொழில்நுட்பச் சேவையின் சம்பந்தப்பட்ட தரத்திலிருந்த சேவைக்காலமாகக் கருதவேண்டும்.
(தொழில்நுட்பச் சேவை பிரமாணக்குறிப்பின் 10.0 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு)

8:5. பிரமாணத்தின் 8:1 ஆம் பந்தியின் (அ) பிரிவின்படி II 'ஆ' வகுப்பில் 6 வருடங்கள் திருப்திகரமாகச் சேவையாற்றியுள்ள முதலாம் திணைக்களப் பரீட்சையில் சித்தியடைந்த உத்தியோகத்தர்களை II 'அ' பிரிவுக்கு பதவிஉயர்த்தும்போது அவர்கள் I ஆம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையையும் சித்தியடைந்திருப்பது கட்டாயமாகும்.

8:6. பிரமாணத்தின் 8:1 ஆம் பந்தியின் 'ஆ' பிரிவின்படி 1ஆம் வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்து 12 வருடங்கள் திருப்திகரமாகச் சேவையாற்றியுள்ள உத்தியோகத்தர்களை II 'அ' வகுப்புக்கு பதவிஉயர்த்தும் போது அவர்கள் I ஆம் திணைக்களப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் கட்டாயமாகும்.

8:7 பிரமாணத்தின் 8:2 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு II 'அ' பிரிவில் 10 வருடங்கள் திருப்திகரமாகச் சேவையாற்றி இரண்டாம் திணைக்களப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள உத்தியோகத்தர்களை வகுப்பு I க்கு பதவிஉயர்த்தும் போது அவர்கள் II 'அ' பிரிவுக்குரிய II ஆம் வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

## 9. திணைக்களச் சேவைகளை தொழில்நுட்பச் சேவைக்கு உள்ளீர்த்தல்

ஏதேனும் திணைக்களத்துடனான சேவையொன்றை தொழில்நுட்பச் சேவைக்கு உள்ளீர்ப்பதற்காக தாபனத் தலைவர்கள் ஆலோசனைகளை முன்வைக்கும் போது அதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் சேவையின் நிகழ்கால அமைவும் தாபன நிருவாக அமைவு காட்டப்படும் பதிவேடொன்றும் சம்பந்தப்பட்ட சேவையில் தற்போது நடைமுறைப்படுகின்ற ஆட்சேர்ப்புத் திட்டத்தின்/திட்டத்தினதும் பதவியினதும்/சேவையின் உத்தியோகத்தர்களின் நிகழ்கால கடமைப்பதிவேட்டின் ஒருபிரதியும் இந்தப் படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். தொழில் நுட்பச் சேவைக்கு உள்ளீர்ப்பதற்காக செய்யப்படும் இத்தகைய கோரிக்கைகள் சபையிடம் முன்னளிப்பதற்காக 1997–12–31 ஆந் திகதிவரை கால அவகாசம் வழங்கப்படுவதுடன் புதிதாக ஏற்படுத்தும் பதவியொன்றை இனம் பிரித்தல் தவிர்ந்த அதன்பின் உள்ளீர்க்கும் படி கோரி அனுப்பப்படும் கடிதங்கள் கவனத்திற்கொண்டு பார்க்கப்படமாட்டாது.

10. இதற்கு மேலதிகமாக பிரமானத்தின் ஏற்பாடுகளை செயற்படுத்தும் போது எழும் ஏதேனும் பிரச்சினை அல்லது தெளிவின்மை இருப்பின் அத்தகைய விடயங்கள் தாபனப் பணிப்பாளர் நாயகத்திடம் முன்னளித்தல் வேண்டும்.

ஒப்பம்/ ஆர்.எஸ். ஜயரத்ன
செயலாளர்.
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

ix/3/tech